செய்தி வெளியீடு எண்:265 நாள்:11.06.2021

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

## திரு. மு.க. ஸ்டாலின் அவர்களது உத்தரவின்படி

## மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் சோளிங்கர் கேபிள்கார் பணி, மயிலாடுதுறை மாவட்டம் திருவெண்காட்டில் உள்ள இந்து சமய அறநிலையத்துறைக்குச் சொந்தமான பள்ளிகள் மற்றும் வடலூர் திரு அருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையம் ஆகியவற்றை ஆய்வு செய்தார்.

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு இன்று(11.06.2021) இராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் திருக்கோயிலில் ரூ.8.76 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் கேபிள்கார் திட்டப்பணிகளை நேரில் ஆய்வு செய்து பணி முன்னேற்றம் குறித்து இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகளிடம் விவரங்களை கேட்டறிந்தார். கேபிள்கார் பணியினை இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்கும் வகையில் விரைந்து செயல்படுத்துமாறு அறிவுரை வழங்கினார். இது மட்டுமின்றி வாகன நிறுத்துமிடத்திலிருந்து கேபிள்கார் இயக்கப்படும் இடம் வரை வயதானவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோரது நலனைக் கருத்தில் கொண்டு பேட்டரி வாயிலாக இயங்கும் வாகனங்களை பயன்படுத்துமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். மேலும் அப்பகுதியில் நடைபெற்று வரும் சாலைப்பணியினை விரைந்து முடிக்கவும், திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு சுத்தமான குடிநீர் வசதியை ஏற்படுத்தித் தரவும் மற்றும் அப்பகுதியில் உள்ள திருக்குளங்களை புனரமைக்கவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.இந்த ஆய்வின்போது இந்து சமய அறநிலையத்துறை ஆணையர், இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர், சார் ஆட்சியர், சோளிங்கர் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் இதர அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

அதன்பின்னர் மயிலாடுதுறை மாவட்டம் திருவெண்காட்டில் உள்ள இந்து சமய அறநிலைத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றை நேரில் ஆய்வு செய்து அப்பள்ளிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை புனரமைக்கவும் புதிதாக கழிப்பிடங்களை கட்டுவதற்கும் தேவையான கருத்துருக்களை இந்து சமய அறநிலையத்துறை ஆணையருக்கு அனுப்பி வைக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். மேலும் ஆங்கில வழிக்கல்வி அறிமுகப்படுத்தவும் சுயநிதித் திட்டத்திலிருந்து அரசு உதவிபெறும் திட்டமாக மாற்றுவதற்கு தேவையான கருத்துருக்களை அனுப்பி வைக்குமாறுமாறும் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியரை கேட்டுக்கொண்டார். இந்த ஆய்வின்போது இந்து சமய அறநிலையத்துறை ஆணையர், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர், மயிலாடுதுறை மற்றும் சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

இறுதியாக கடலூர் மாவட்டம் வடலூரில் அமைந்துள்ள திரு அருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையத்தை மாண்புமிகு வேளாண்துறை அமைச்சர் அவர்களுடன் சேர்ந்து கூட்டாக ஆய்வு செய்தார். அவ்விடத்தில், 2021-ம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தல் அறக்கையில் அறிவிக்கப்பட்டிருந்த உலகத்தரத்திலான வள்ளலார் சர்வதேச மையத்தினை உருவாக்குவதற்குத் தேவையான திட்ட மதிப்பீட்டு அறிக்கை தயாரிப்பதற்கு ஏதுவாக விரிவான கள ஆய்வை மேற்கொண்டார். இவ்வாய்வின்போது இந்து சமய அறநிலையத்துறை ஆணையர், கடலூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் உடனிருந்தனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9